வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 65 of 2016

வழக்கு சாட்சி - PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.நாகராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணி | வயது | : | |
| கிராமம் | : | சத்தியமங்கலம் | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.

(எதிரிகள் ஆஜர்.).

**முதல் விசாரணை :** **நாள் : 27.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு வருகிறேன். கடந்த 2015 ஆம் வருடம் ஒரு நாள் தேதி மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் காலை 11.00 மணியளவில் நானும் என் நண்பர் சரவணனும் ஆறுமுத்தம்பாளையம் பிரிவு ரோடு அருகில் கூட்டமாக போலீசார் நின்றுக்கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் இரண்டு நபர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் கார்த்திக் மற்றும் நாகேந்திரன் என்று சொன்னார்கள். திருட்டு வழக்கு சம்மந்தமாக இரண்டு மூன்று இடங்களில் திருடியதாக சொன்னார்கள். அங்கிருந்த நபர்களிடம் கையொப்பம் கேட்டார்கள் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி கார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.தசா.ஆ.3** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி நாகேந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.தசா.ஆ.4** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி அரசுதரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியாக கு.வி. செய்ய அனுமதி**

**கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

1) கேள்வி : போலீசார் விசாரணையின் போது 21.11.2018 ஆம் தேதி காலை 6.00 மணிக்கு நானும் என் நண்பர் சரவணன் என்பவரும் சொந்தவேலையாக ஆறுமுத்தம்பாளையம் பிரிவு அருகில் மோட்டார் சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்தபோது போலீசார் ஆஜர் எதிரிகளை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் இருவரும் வழிப்பறி கொல்லை மற்றும் திருட்டு வழக்குகளில் சம்மந்தப்பட்டிருப்பதாக காலை 6.30 மணிக்கு போலீசார் எதிரி கார்த்திக் நாகேந்திரன் ஆகியோரை விசாரணை செய்து இருவரும தானாக முன்வந்து ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 28.09.2015 ஆம் தேதி அதிகாலை 1.30 மணிக்கு ராயர்பாளையம் அபிராமி நகரில் உள்ள இரண்டு வீடுகளில் முன் பக்க கதவை இரும்பு கம்பியால் உடைத்து திருட முயற்சி செய்ததாகவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்தோம் என்று கூறியுள்ளேன் என்றால்

பதில் : சரியல்ல.

2) கேள்வி : தற்போது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்றும் பொருட்டு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

பதில் : சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.01.27 16:53:45 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.